பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 22 ஞாயிற்றுக்கிழமை 07.08.2022 கதிர் 164

## மரக்கறிகளின் விலை உயர்வு



நிலவும் மழையுடனான வானிலை காரணமாக விளைச்சல்கள் சேதமடைந்துள்ளமையால் எதிர்வரும் வாரங்களில் மரக்கறிகளின் விலை 40 முதல் 50 சதவீதத்தால் அதிகரிக்கக் கூடும் என்று அகில இலங்கை ☞2

# கூட்டமைப்பைப் பிளவுபடுத்தும் முதலாவது தேங்காய் உடைப்பு!

### ரணிலைச் சாடுகின்றார் சி.வி.கே.

(ஆர். கலையமுதன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவருடைய பாணியிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கின்ற முதலாவது தேங்காயை உடைத்து இருக்கின்றார்.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார். ☞2





## 6 கோடி ரூபா நிதி மோசடி: பெண்ணொருவர் கைது!

அரச வங்கி ஒன்றில் இருந்து 6 கோடி ரூபாவை மோசடி செய்த முன்னாள் வங்கி அதிகாரியான பெண் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு அரச வங்கிக்குச் சொந்தமான 48 தனியார் கடன் கோப்புகள் மூலம் தவறான தகவல்களை அளித்து ☞2

## ரூ. 8 இலட்சம் பெறுமதியான நகைகளும் பணமும் திருட்டு



யாழ். மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் ஜயனார் கோயில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து 10 பவுண் நகை மற்றும் இலங்கை ரூபா, வெளிநாட்டு நாணயங்கள் என்பன திருடப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி பிற்பகல் வேளையில் இந்தச் ☞2

## ஜோன்ஸ்டன், நாமல், பவித்ரா, எஸ்.பி. ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகள்

### ஜனாதிபதியிடம் 'மொட்டு' பரிந்துரை



சர்வகட்சி அரசில் முன்னாள் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நாமல் ராஜபக்ஷ, பவித்ரா வன்னியாரச்சி, எஸ்.எம். சந்திரசேன, ரோஹித அபேகுணவர்தன மற்றும் எஸ்.பி.திஸாநாயக்க ☞2

## இந்தியாவின் எதிர்ப்புக்கு மத்தியில் இலங்கை வருகின்றது சீனக் கப்பல்?

### பயணத்தை ஒத்திவைக்குமாறு விடுத்த கோரிக்கைக்கு இன்னும் பதில் இல்லை



அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கான சீனக் கப்பலின் வருகையை உடனடியாக மீள்பரிசீலனை செய்யுமாறு இலங்கை விடுத்த கோரிக்கைக்குச் சீனத் தூதரகம் இன்னும் பதில் வழங்கவில்லை.

பீஜிங்குடன் ஆலோசனை நடத்தி, பதில் தருவதாக சீனாவின் தூதுவர், நேற்று இலங்கையின் ☞2

# தமிழ், முஸ்லிம் எம்.பிக்களில் பலர் அமைச்சுப் பதவியேற்கத் தயாராம்

### பிரதமர் தினேஷ் கூறுகின்றார்



எதிரணியில் பலர் சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்திருப்பது மட்டுமன்றி அமைச்சுப் பதவிகளையும் பொறுப்பேற்கத் தயாராகவுள்ளனர். அதில் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்குகின்றனர். தம் இனம் சார்ந்த மக்களின் நலன் கருதி அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்க அவர்கள் முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. ☞2

## லிட்ரோ 'காஸ்' விலை நாளை முதல் குறைப்பு



நாளை நள்ளிரவு முதல் எரிவாயுவின் விலை குறைக்கப்படும் என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எரிவாயு விலைச் சூத்திரத்தின்படி 12.5 கிலோகிராம் எடையுள்ள வீட்டு எரிவாயு சிலிண்டரின் விலை 200 ரூபாவுக்கு மேல் குறைக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நான் பொறுப்பேற்றபோது 14 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டிருந்தது. தற்போது லிட்ரோ நியாயமான இலாபத்தை ஈட்டுகின்றது என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

## இராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேமுடியாது

### ஐ.நா. ஆணையாளரின் கருத்துக்குப் பீரிஸ் கண்டனம்



இலங்கை இராணுவத்தினர் போர் விதிகளை மதித்தே நடந்தார்கள். புலம்பெயர் புலிகள் சார் அமைப்புக்களின் கட்டுக்கதைகளை நம்பி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை இராணுவ ☞2

## ஆணையரின் கூற்று; ஆராய்கின்றது அரசு



இலங்கை பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள தருணத்தில், இலங்கைப் படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஏன் கூறினார் என்பது ☞2



## சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கே ஐக்கிய மக்கள் சக்தி ஒத்துழைப்பு

### அமைச்சுப் பதவிகளை ஏற்க மாட்டோம்; எதிர்க்கட்சித் தலைவர் சஜித் திட்டவட்டம்

எதிர்க்கட்சி என்ற ரீதியில் சர்வகட்சி அமைச்சு சூதாட்டத்தின் ஊடாக ராஜபக்ஷவினரின் குப்பைகளைச் சுமக்க விரும்பவில்லை. எனினும், சர்வகட்சி வேலைத் திட்டத்துக்கு நாம் தயார்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ☞2

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை: தீர்வு கிடைக்கும் வரை ஒழிக்கப்படக்கூடாது!

### அதாவுல்லா எம்.பி. வலியுறுத்து



சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்பு, இருப்பு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் அரசமைப்பூடாக உறுதிப்படுத்தப்படும் வரை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படக்கூடாது.

- இவ்வாறு தேசிய காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் ☞2

## சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கே ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவும் முன்னாள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்து மக்களுக்குச் சேவையாற்றிய யு.எல்.எம். பாரூக்கின் முதலாவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று ருவன்வெல்லயில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் தற்போதைய நிலைக்கு கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான மொட்டு அரசே பொறுப்பு. அவருக்கு அதிகாரத்தை வழங்கிய எம்.பிக்களும் இந்நிலைமைக்குக் காரணம். இந்நிலையில் நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட 225 பேரும் பல அர்ப்பணிப்புக்களைச் செய்ய வேண்டும். தற்போது அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ள வேண்டிய காலமே உதயமாகியுள்ளது.

கடந்த காலங்களில் நாகத்தைக் காட்டியும், முட்டி உடைத்தும், பாணியைக் காட்டியும் மக்களை ஏமாற்றினர். இனி மேலும் ஏமாற்றாமல் புத்தியுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இந்த வரிசையில் நிற்கும் யுகத்தால் சகலரும் அவதியுறுகின்றனர். இதற்குத் தீர்வை வழங்குமாறு மக்கள் கோரிய போதும் மொட்டு அரசு அதற்கு நிலையான தீர்வை வழங்கவில்லை.

அமைச்சுப் பதவிகளைப் பகிர்ந்து கொள்ளாமல், சலுகைகளைப் பார்க்காமல் அர்ப்பணிப்புகளைச் செய்ய வேண்டும். சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் பெரிய பதவிகளில் அமர்ந்துள்ள அமைச்சர்கள் கூட தமது குடும்ப உறுப்பினர்களைத் தமது பணியாளர்களாக இணைத்துக்கொண்டுள்ளனர்.

சர்வகட்சி ஆட்சியில் அந்நிலைமை நீங்க வேண்டும். இந்நேரத்தில் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப உழைக்க வேண்டும். இதன்போது அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. எதிர்காலத்தில் அமைச்சர்களின் நலனுக்காக மக்கள் நிதியைப் பயன்படுத்தக் கூடாது - என்றார்.

## நிறைவேற்று அதிகார ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறியதாவது:-

புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது பாராட்டுக்குரியது. நாட்டில், ஏற்பட்டுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் ஸ்திரம் அவசியம். இந்த ஸ்திரத்தை உருவாக்கும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும்.

எந்த அரசமைப்பு உருவாக்கப்பட்டாலும் சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்பு, இருப்பு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் அதில் உறுதி செய்யப்பட வேண்டும். இவ்வாறு உறுதி செய்யப்படும் வரை, நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்படக் கூடாது.

பட்டம், பணம் மற்றும் பதவிகளுக்காகச் சோரம் போகும் எம்.பிக்கள் இருக்கும் வரைக்கும், நாடாளுமன்றத்தைப் பலப்படுத்த முடியாது. இதனால்தான், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அவசியத்தை எமது கட்சி வலியுறுத்துகின்றது. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவால் அறிமுகம் செய்யப்பட்ட மாகாண சபைகள் முறைமை எமது நாட்டுக்குத் தேவையில்லை.

சின்னஞ் சிறிய நாட்டை ஒன்பதாகப் பிரித்து நிர்வாகம் நடத்துவதால் செலவுகளே அதிகம். ஏதாவது நாடுகளின் அழுத்தங்களுக்காக இந்த மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டிருந்தால், அந்த நாட்டுக்கு எமது நாட்டின் நிலை குறித்து அரசு தெளிவுபடுத்தல் அவசியம்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ளதால் பிரிவினைச் சிந்தனைகள் பலமிழந்துள்ளன. சகல இனங்களும் ஒன்று சேர்ந்து உழைக்கும் புதிய கலாசாரத்தை காலிமுகத்திடலில் காணக்கிடைக்கின்றது. எனவே, பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது போன்று இனவாதமும் ஒழிக்கப்படல் அவசியம். இதை ஒழிக்கும் வகையிலான புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதுதான் சிறந்தது - என்றார்.

## கூட்டமைப்பைப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் பத்தாவது தேசிய மாநாடு அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி. தலைமையில் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே சி.வி.கே. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு வாக்களித்தனர் என்று ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தேகக் கண்ணுடன் ஒருவரை ஒருவர் பார்க்கின்ற விடயத்தை கெட்டித்தனமாக ரணில் விக்கிரமசிங்க செய்திருக்கின்றார். அந்தளவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் சோரம் போகமாட்டார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் மூன்று கட்சிகளும் எல்லோரையும் இணைத்துக் கொண்டு செயற்பட வேண்டும். அதனுடைய ஒற்றுமை நீடிக்க வேண்டும். எல்லோரையும் அணைத்துச் செல்லக்கூடிய சுபாவம் கொண்ட சித்தார்த்தன் இந்த முயற்சியைத் தொடரவார்.

என்னைப் பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சியின் உப கட்சியினுடைய நிகழ்வே இது. இங்கு அங்கம் வகிப்பவர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியில் இருந்து வந்தவர்களே. தற்போது அது உடைந்து இருந்தாலும் கூட அடிப்படையில் தமிழரசு என்ற ஒற்றுமை இருக்கின்றது - என்றார்.

## ஆணையரின் கூற்று; .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் ஆராய்கின்றோம்.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ள 58 இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 47 உறுப்பு நாடுகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் கோரிக்கை விடுத்திருந்தார். அது தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிவிப்பு தொடர்பில் அரசு கவனம் செலுத்தும். நாடு பல துறைகளில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இந்த நேரத்தில் ஏன் இந்த அறிவிப்பு வந்தது என்பது தொடர்பில் ஆராய்வோம். இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை மட்டத்தில் ஆராயப்படும். அதன்பின்னர் இலங்கை அரசின் உத்தியோகபூர்வ பதிலை வெளியிடுவோம் - என்றார்.

## இராணுவத்தினருக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது.

- இவ்வாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ள 58 இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 47 உறுப்பு நாடுகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் கோரிக்கை விடுத்திருந்தார். அது தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வலியுறுத்தல் இலங்கை இராணுவத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் செயலாகும். இலங்கை இராணுவ அதிகாரிகள் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தும் நடவடிக்கையை ஐ.நா. உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்.

ஐ.நா. உறுப்புரிமை நாடுகளிடம் இலங்கை இராணுவ அதிகாரிகளைக் கைதுசெய்யுமாறு கோரவோ அல்லது பயணத்தடை விதிக்குமாறு கோரவோ மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டுக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆணையாளரின் இந்த அறிவிப்புக்கு எதிராக அரசு கடும் கண்டனங்களைத் தெரிவிக்க வேண்டும்- என்றார்.

## தமிழ், முஸ்லிம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டவுடன் சர்வகட்சி அமைச்சரவையும் நியமிக்கப்படும். ஆளும் - எதிர்த்தரப்பு என்று வேறுபாடின்றி மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஓரணியில் சங்கமித்து சர்வகட்சி அரசை நிறுவ வேண்டும். அப்போதுதான் பொருளாதார நெருக்கடியிலிருந்து எமது நாட்டை மிக விரைவாக மீட்டெடுக்க முடியும்.

கட்சி அரசியல் செய்து ஆட்சி நடத்தினால் அதனால் நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை. சர்வதேச நாடுகளும் எமக்கு உதவி புரிய முன்வரமாட்டா. எனவே, கட்சி அரசியலை ஒதுக்கிவைத்துவிட்டு நாட்டுக்காக - மக்களுக்காகப் பலமான சர்வகட்சி அரசை நாம் ஒன்றிணைந்து நிறுவ வேண்டும் - என்றார்.

## இந்தியாவின் எதிர்ப்புக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோது அறிவித்துள்ளார்.

சீனாவின் இந்த உளவுக் கப்பல் அதன் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற அடிப்படையில் இந்தியா கடும் எதிர்ப்புக்களைத் தெரிவித்து வரும் நிலையிலேயே இந்த நகர்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னர் இந்தக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கான அனுமதியை இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கைத் துறைமுக அதிகார சபை ஆகியவை கடந்த ஜூலை 12ஆம் திகதியன்று வழங்கியுள்ளன.

கப்பல் இப்போது இந்தோனேசியாவுக்கு அருகே நடுக்கடலில் நேரடியாக அம்பாந்தோட்டை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் ஆகஸ்ட் 11 முதல் 17ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்தியாவின் தொடர்ச்சியான அதிருப்திக்கு மத்தியில் இலங்கையின் வெளியுறவு அமைச்சு, சீனத் தூதரகத்துக்குக் கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

அதில், 'யுவான் வாங் 5' கப்பல் அம்பாந்தோட்டைக்கு வரும் திகதியை மேலும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும் வரை ஒத்திவைக்க வேண்டும் என்று இராஜதந்திர விடயங்களுக்குப் பயன்படுத்தப்படும் மூன்றாம் ஆள் குறிப்பு மூலம் இலங்கை கோரியிருந்தது.

இந்தக் கோரிக்கை கிடைத்தவுடன், ஜனாதிபதி விக்கிரமசிங்கவுடன் அவசர சந்திப்பு ஒன்றை சீனாவின் தூதுவர் கேட்டிருந்தார். இந்தச் சந்திப்பே நேற்று இடம்பெற்றுள்ளது.

## ஜோன்ஸ்டன், நாமல், .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பரிந்துரைத்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு பத்தரமுல்லையில் உள்ள பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் பொதுஜன முன்னணியின் பெரும்பாலான உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இதன்போதே மேற்படி பரிந்துரையை பொதுஜன முன்னணி முன்வைத்துள்ளது.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து அமைக்கப்படும் சர்வகட்சி அரசின் வியூகம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படும் 10 அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு கடந்த நாட்களில் இடம்பெற்றன.

மக்கள் விடுதலை முன்னணிக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், சர்வகட்சி அரசு தொடர்பில் பிரதமருக்கும், பொதுஜன முன்னணியின் உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

## ரூ. 8 இலட்சம் பெறுமதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

வீட்டில் கணவன் மற்றும் மனைவி வசித்து வரும் நிலையில் அவர்கள் இருவரும் வேலைக்குச் சென்ற பின்னர், வீட்டின் பின்பக்க ஜன்னலை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள், அலுமாரியினுள் வைக்கப்பட்டிருந்த நகை மற்றும் பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

சில காலங்களுக்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து வந்த உறவினர்கள் அந்த வீட்டில் தங்கிச் சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 6 கோடி ரூபா நிதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பணத் தொகை மோசடி செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய முதலாவது சந்தேகநபர் குறித்த அரச வங்கியின் உள்ளகக் கணக்காய்வு அதிகாரி எனவும், அவர் உயிரிழந்துவிட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கைதுசெய்யப்பட்ட இரண்டாவது சந்தேகநபரான பெண் அதே வங்கியில் உதவி பொது மேலாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## மரக்கறிகளின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார மத்திய நிலையங்களின் குழு தெரிவித்துள்ளது.

மலைநாட்டு மரக்கறிகளின் விலை 60 முதல் 70 சதவீதத்தால் அதிகரிக்கக் கூடும் என்று அதன் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோகிராம் கரட் மொத்த விற்பனையின் கீழ் 260 ரூபா முதல் 290 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

கோவா ஒரு கிலோகிராம் 230 ரூபா முதல் 260 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

லீக்ஸ் 130 ரூபாவிலிருந்து 170 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இந்நிலையில் மரக்கறிகளின் விலை 40 முதல் 50 சதவீதத்தால் அதிகரிக்கக் கூடும் என்று அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் குழுவின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி. யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காத்திருக்கும் ஜெனிவா நெருக்கடி

நாட்டில் ஒருபுறம் பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடி உச்சகட்டம் என்றால் மறுபுறம் இன்னொரு நெருக்கடியும் – சிக்கலும் – புதிதாகக் கட்டவிழத் தயாராகக் காத்திருக்கின்றது.

அது ஜெனிவாவில் நடைபெறப் போகும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் இலங்கை விடயம் எடுக்கப்பட இருப்பதாகும்.

அதுவும் ஆட்சித் தலைவர் மாற்றத்தை அடுத்து, நாட்டில் மனித உரிமைகள் – குறிப்பாக மக்கள் ஒன்று கூடுவதற்கும், ஜனநாயகமுறையில் தமது கருத்துக்களை வெளிப்படுத்தவும் எதிர்ப்புக்களை காட்டவும் உள்ள உரிமைகள் – மோசமாக மீறப்படுகின்றன எனக் குற்றம் சுமத்தப்படும் பின்னணியில் இம்முறை ஜெனிவா விடயங்கள் கட்டவிழ்கின்றன.

இந்தத் தடவை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51 ஆவது அமர்வு செப்டம்பர் 12ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் ஏழாம் திகதி வரை நடைபெற இருக்கின்றது.

தற்போதைய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பச்சலி மிச்செலட் அம்மையார் வரும் 31 ஆம் திகதி தமது தற்போதைய பதவிக்காலத்தின் முடிவுடன் பணியில் இருந்து விலகுகின்றார். ஆகையினால், 51ஆவது அமர்வு புதிய அல்லது பதில் மனித உரிமைகள் ஆணையாளர் ஒருவர் தலைமையில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவரை காலமும் இலங்கை விடயத்தை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கையாண்டு வந்த இணை நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, கனடா, மலாவி, மொண்டனிக்குரோ, வட மஸிடோனியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் அண்மைக் காலத்தில் பல தடவைகள் ஜெனிவாவில் கூடி இலங்கை நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து இருக்கின்றனர் என்று தகவல்.

இதுவரை காலமும் இலங்கை தொடர்பான விடயங்களில் பிரேரணைகள், அறிக்கைகள் தயாரிப்பதில் முக்கிய பங்களித்து வந்த அதிகாரியான ரொரி முன்கோவன் தலைமையில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் விசேட அவதானிகள் குழு ஒன்று இலங்கை நிலைமைகளை நேரில் கண்டறிவதற்கு அடுத்த மாத முற்பகுதியில் இலங்கை வருகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஆசிய, பசிபிக் பிராந்திய பகுதிகளுக்குப் பொறுப்பான அதிகாரியான இவர், இலங்கை விடயங்களில் கைதேர்ந்தவர். நன்கு பரிச்சயமானவர் என்று கூறப்படுபவர்.

இவர் தலைமையிலான இந்தக் குழு கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் இலங்கை விடயங்களில் சம்பந்தப்பட்ட தரப்புகள் அனைவரையும் இங்கு சந்தித்துப் பேசவிருக்கின்றது.

முக்கியமாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அதிகாரிகள் குழு இலங்கை வந்து நிலைமைகளை நேரில் கண்டறிய வேண்டும் என ஒற்றைக் காலில் விடாப்பிடியாக நின்று வலியுறுத்தி வரும் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தையும் இக்குழு கொழும்பில் சந்தித்து உரையாடி, இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகள் குறித்து அவரின் கருத்துக்களையும் உள்வாங்கும் எனத் தெரிகின்றது.

இக்குழு ஜெனிவா திரும்பிய கையோடு தனது விஜய அவதானிப்பு அறிக்கையை கவுன்ஸிலுக்கு சமர்ப்பிக்கும் என்றும், கவுன்ஸிலில் இம்முறை நடக்கும் 51 ஆவது அமர்வின் முதல் நாளிலேயே இந்த அறிக்கை கவுன்ஸிலுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு விடும் என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 46/1 இலக்கத் தீர்மானம் காலம் முடிவடைந்திருப்பதால், இனி, கடுமையான வாசகங்கள் அமைந்த – இலங்கையைக் கடும் நெருக்குவாரங்களுக்குள் முடக்கும் விடயங்கள் அடங்கிய – புதிய பிரேரணை ஒன்று இம்முறை நிறைவேற்றப்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன. இலங்கைக்கு இது போதாத காலம்தான்...!

## ஜனாதிபதி மாளிகைக்குமுன் போராட்டத்தில் ஈடுபட்ட ஹிருணிகாவை சந்தேக நபராகப் பெயரிட முடியாது!

### கோட்டை நீதிவான் அறிவிப்பு



கோட்டை, செத்தம் வீதியில் ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டமையை மையப்படுத்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர உள்ளிட்ட 10 பேரை சந்தேக நபர்களாகப் பெயரிட கோட்டை பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை கோட்டை நீதிவான் திலின கமகே நிராகரித்தார்.

ஹிருணிகா சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஃபர்மான் காஸிம், சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா ஆகியோருடன் சட்டத்தரணி ஹபீல் பாரிஸ் முன்வைத்த வாதங்களை ஏற்றுக்கொண்டே நீதிவான் இதற்கான உத்தரவைப் பிறப் பித்தார்.

கடந்த ஜூலை 6 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக ஹிருணிகா உள்ளிட்ட 10 பேர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை அவர்களை நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி அவர்கள் நீதிமன்றில் ஆஜராகினர்.

இதன்போது நீதிமன்றில் வாதங்களை முன்வைத்த சட்டத்தரணி ஹபீல் பாரிஸ், ஹிருணிகா உள்ளிட்டோர் ஜுலை 6 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர் எனவும் எனினும் அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படாத அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான தயார்ப்படுத்தல் ஜுலை 25 ஆம் திகதியின் பின்னரேயே இடம்பெற்றன எனவும் சுட்டிக்காட்டினார். அப்படியானால் ஆட்சிமாற்றத்தின் கரங்களும் ஹிருணிகாவிற்கு எதிரான வழக்கின் பின்னணியில் இருக்கின்றனவா என அவர் கேள்வி எழுப்பினார்.

இவ்வாறான நிலையில் சந்தேகத்துக்கிடமான, ஏற்றுக்கொள்ளமுடியாத ஆவணங்களை மையப்படுத்திய வழக்கொன்றில் ஒருவரை சந்தேகநபராகப் பெயரிடமுடியாது என அடிப்படை ஆட்சேபணையொன்றை சட்டத்தரணி ஹபீல் பாரிஸ் முன்வைத்தார்.

இந்நிலையில் ஹிருணிகா உள்ளிட்டோரை சந்தேகநபர் கூண்டில் கூட ஏற்றுவதற்கு மறுத்த நீதிவான் திலின கமகே, பொலிஸாரின் கோரிக்கை பிரகாரம் மேற்படி 10 பேரையும் சந்தேகநபர்களாகப் பெயரிடுவதற்கு மறுத்து வழக்கை திகதி அறிவிப்பு எதுவுமின்றி மூடிவைக்க உத்தரவிட்டார்.

## சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான மருத்துவ சோதனை கட்டணம் அதிகரிப்பு

சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான புதிய மருத்துவ பரிசோதனைக் கட்டணம் 1500 ரூபா என தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், கனரக வாகனங்களுக்கான மருத்துவ பரிசோதனை கட்டணமும் சிறுநீர் மருந்து பரிசோதனை தவிர்த்து 1500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த மருத்துவப் பரிசோதனைக் கட்டணம் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்படும் என தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.

## விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் அளிக்க முயன்ற 14 இலங்கையர்களிடம் இந்தியாவில் விசாரணை!

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு புத்துயிர் அளிக்க முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 14 இலங்கையர்கள் இந்தியாவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

திருச்சியில் இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு கும்பலிடம் இருந்து 60 செல்போன்கள் மற்றும் 50 சிம்கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

கேளம்பாக்கம் அருகே தையூரில் உள்ள ஒரு வீட்டில் தேசிய புலனாய்வு முகாமை (என்ஐஏ) திடீர் சோதனை நடத்திய போதே இந்தப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

திருச்சி மத்திய சிறைக்கு அருகில் உள்ள வெளிநாட்டினர் தங்க வைக்கப்பட்டிருந்த சிறப்பு முகாமில் கடந்த ஜூலை 20 ஆம் திகதி என்.ஐ.ஏ. குழுவினர் சோதனை நடத்தினர்.

போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்ட குற்றவாளிகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 14 இலங்கையர்களை இந்தக் குழு விசாரித்தது.

சோதனையின் போது, என்.ஐ.ஏ. குழு 60 செல்போன்கள் மற்றும் 50 சிம் கார்டுகளுடன் ஒரு மடிக் கணினியையும் கைப்பற்றியிருந்தன.

முகாமில் உள்ள குறைந்தபட்சம் 14 கைதிகள் பாகிஸ்தானில் இருந்து கடத்தல்காரர்களுடன் தொடர்பில் இருந்தனர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த கைதிகள் இந்தியாவிலும் இலங்கையிலும் இயங்கி வருகின்றனர் எனவும், விடுதலைப் புலிகளின் மறுமலர்ச்சிக்காக செயற்படுகின்றனர் எனவும் என்.ஐ.ஏ. தெரிவித்துள்ளது.

## உணவுப்பொதி மற்றும் தேநீர் விலைகளும் குறைகின்றன!

நாளை (திங்கட்கிழமை) முதல் அமுலுக்கு வரும் வகையில் உணவுப்பொதி மற்றும் தேநீர் ஒன்றின் விலை குறைக்கப்படவுள்ளன.

எரிவாயு, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அண்மையில் குறைக்கப்பட்ட நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள சுமார் 60 வீத உணவகங்கள் எரிவாயு தட்டுப்பாட்டுக்கு மத்தியில் செயற்பாடுகளை நிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என அந்தச் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

10 வீதம் முதல் 15 வீ வரையிலான விலை குறைப்பு திங்கட்கிழமை அமுல்படுத்தப்படும் என்றும் எரிவாயு சிலிண்டர்களின் விலை குறைப்பு அறிவிக்கப்பட்டதும் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.



# காபூல் குண்டுவெடிப்பில் 8 பேர் பரிதாப சாவு; ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்பு

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள மசூதி அருகே வெடிகுண்டு வெடித்ததில் 8 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 18 பேர் காயமடைந்தனர். தகவலின்படி, மசூதிக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த கார் வெடித்த போது, இந்த குண்டு வெடிப்பு சம்பவம் நடந்தது. இதுகுறித்து காபூலின் காவல்துறைத் தலைவரின் தலிபான் செய்தித் தொடர்பாளர் காலித் சத்ரான் கூறுகையில், ' மேற்கு காபூலில் சர்-இ-கரேஸ் பகுதியில் வெடிகுண்டு வெடித்தது. இந்த தாக்குதலுக்கு இஸ்லாமிய (ஐஎஸ்ஐஎஸ்) அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. பலி எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது.

குண்டுவெடிப்பில் 20 பேர் கொல்லப்பட்டனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்' என்றார். ஆப்கானிஸ்தானில் ஐஎஸ் பயங்கரவாதிகள் கடந்த 2014ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றனர். தற்போது தலிபான்கள் ஆட்சி நடக்கும் நிலையில், அவர்களுக்கு சவால் விடும் வகையில் ஐஎஸ் தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதலை நடத்தி வருவதால் ஆப்கானிஸ்தானில் சிறுபான்மையினராக வாழும் ஷியா சமூகத்தினர் அச்சத்துடன் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காது பெரிதாக இருக்கு, உயரம் மாறியிருக்கு இது, அவர் இல்லை

## பொது இடங்களில் சுற்றும் போலி புடின்




'தற்போது வெளியில் நடமாடிக் கொண்டிருக்கும் புடின், நிஜமான புடினே இல்லை, அவரோட டூப்பு'என உக்ரைன் உளவுத்துறை புதுத்தகவலை வெளியிட்டுள்ளது. ரஷ்யா, உக்ரைன் இடையேயான போர் 6 மாதங்களாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதற்காக ரஷ்ய அதிபர் புடினுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து வரும் அதே வேளையில், ஐரோப்பிய நாடுகளின் உளவுத்துறை புடின் பற்றி எதிர்மறையாக செய்திகளை வெளியிட்ட வண்ணம் உள்ளன. புடினுக்கு ரத்த புற்றுநோய் உள்ளது, அவர் நீண்ட காலம் உயிருடன் இருக்க மாட்டார், மறைவிடத்தில் வாழ்கிறார் என்றெல்லாம் ஆதாரமில்லாத தகவல்களை அள்ளி விடுகின்றன. இதற்கெல்லாம் புடினோ, ரஷ்ய அரசோ இதுவரை எந்த விளக்கமும் தரவில்லை, மறுக்கவும் இல்லை. இதற்கிடையே, கொரோனா மற்றும் உக்ரைன் போர் காரணமாக, எந்த உலக நாடுகளுக்கும் செல்லாமல் இருந்த புடின் தற்போது மீண்டும் சர்வதேச பயணங்களை தொடங்கி உள்ளார்.

சமீபத்தில் அவர் ஈரான், துருக்கி நாடுகளுக்கு அவர் பயணம் செய்துள்ளார். இந்த நிலையில், தற்போது பொது இடத்தில் காணப்படுவது நிஜமான புடினே இல்லை என உக்ரைன் ராணுவ உளவுத்துறை பகீர் கவலை வெளியிட்டுள்ளது. உக்ரைன் பாதுகாப்பு துறையின் உளவுப்பிரிவு தலைவரான மேஜர் ஜெனரல் கைரிலோ புடானோவ் டிவி சேனலுக்கு அளித்துள்ள பேட்டியில், 'இப்போது வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் ரஷ்ய அதிபர் புடின் நிஜமான புடினே கிடையாது. அவரை போலவே உடல் தோற்றம் கொண்ட போலி நபர். நமது கை ரேகை போல காதுகளும் ரொம்பவே வித்தியாசமானவை. அவற்றை மாற்ற முடியாது. இப்போதுள்ள புடினின் படங்களையும், முந்தைய புடினின் போட்டோக்களையும் பார்த்தால், காது மாறுபட்டிருப்பது நன்றாகவே தெரியும். மேலும், உயரத்திலும் மாறுபாடு உள்ளது. நடை, பழக்கவழக்கங்களிலும் நிறைய வித்தியாசம் காணப்படுகிறது. துருக்கியில் அவர் விமானத்தில் இருந்து இறங்கி வருவதை பார்த்தாலே வித்தியாசம் தெரியும்,'என தெரிவித்துள்ளார்.



# தேசத் துரோக வழக்கில் ரஷ்ய விஞ்ஞானி கைது!

## புடினுக்கு நெருக்கமானவர்



ரகசியங்களை கசிய விட்டமைக்காக புடினுக்கு நெருக்கமான ரஷ்ய விஞ்ஞானி தேசத்துரோக வழக்கில் கைது எய்யப்பட்டார். ரஷ்யாவை சேர்ந்த 'நோவோசி பிர்ஸ்க்' என்ற ஆராய்ச்சி நிறுவனம், அதிநவீன ஹைப் பர்சோனிக் ஏவுகணைகளை தயாரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் தலைவராக இருந்த ரஷ்ய விஞ்ஞானி ஆண்ட்ரே ஷிப்லியுக், ஏவுகணை ரகசியங்களைகசியவிட்டதாககுற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, தேசத் துரோக குற்றத்துக்காக நேற்று அவர் கைது செய்யப்பட்டார். ரஷ்யாவின் ஹைப்பர்சோனிக் ஏவுகணை அமைப்புகளை உருவாக்குவதற்கான ஆராய்ச்சிகளை சமீப காலமாக இவர் தான் ஒருங்கிணைத்து வந்தார்.

இந்த ஆராய்ச்சி நிறுவனத்தில் ஏற்கனவே கடந்த மாதம் 2 விஞ்ஞானிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். ரஷ்யாவில் தேசத் துரோக சட்டத்தில் கைது செய்யப்படுபவர்களுக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும். சாத்தான்-2 ஏவுகணை உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் தொடர்ந்து வரும் நிலையில், புதிய ஹைப்பர்சோனிக் ஏவுகணையை ரஷ்ய அதிபர் புடின் சோதனை செய்துள்ளார். இதுகுறித்துஅவர்கூறுகையில், 'இந்த ஏவுகணையை யாராலும் தடுத்து நிறுத்த முடியாதது. இதேபோல், சாத்தான் -2 என்ற பெயரில் மற்றொரு ஏவுகணையும் உருவாக்கப்பட்டு வருகிறது. இது. உலகின் மிக ஆபத்தான ஆயுதம். 2 ஏவுகணைகளும் இந்தாண்டு இறுதிக்குள் தயராகி விடும்,'என்று தெரிவித்துள்ளார்.

# எண்ணெய் கிடங்கு தீப்பிடிப்பு 80க்கும் மேற்பட்டோர் காயம்



மடான்சாஸ் நகரில் மின்னல் தாக்கி எண்ணெய் கிடங்கு தீப்பிடித்ததில் 80க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட 17 தீயணைப்பு வீரர்களை காணவில்லை என மடான்சாஸ் மாகாண அரசு அறிவித்துள்ளது. எண்ணெய் கிடங்கில் பற்றி எரியும் தீயை அணைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என கியூபா அரசு தகவல் தெரிவித்துள்ளது.

## ஐஸ்லாந்து நாட்டில் வெடித்துச் சிதறும் எரிமலை:

# எச்சரிக்கையையும் மீறி எரிமலை வெடிப்பை காணக் குவியும் மக்கள்

ஐஸ்லாந்து நாட்டின் சர்வதேச விமான நிலையம் அருகே இரு தினங்களுக்கு முன்னர் வெடிக்க தொடங்கிய எரிமலையிலிருந்து லாவா குழம்பு வழிந்தோடும் காட்சிகள் வெளியாகியுள்ளன. ஐஸ்லாந்து தலைநகரான ரேக்ஜவிக்கிள் இருந்து 32கி.மீ. தொலைவிலும், அந்நாட்டின் சர்வதேச விமான நிலையத்திலிருந்து 15கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது பக்ராடால்ஸ்பியால் எரிமலை. அந்த பகுதியில் கடந்த சில நாள்களாகவே சில அதிர்வு ஏற்பட்டு வந்த நிலையில், கடந்த 3ம் திகதி எரிமலை வெடிக்க தொடங்கியது. அடுத்தடுத்த நாள்களில் எரிமலையிலிருந்து புகையுடன் கூடிய லாவா குழம்பு வெளியேறி வருகிறது.

எரிமலை வெடிப்பு ஏற்பட்டுள்ள பகுதிக்கு பொதுமக்கள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் எரிமலை வெடித்துச் சிதறுவதை காண, அப்பகுதியில் எச்சரிக்கையும் மீறி ஏராளமான மக்கள் குவிந்து வருகின்றனர். அதேபோல விமான போக்குவரத்தும் தடையின்றி செயல்பட்டு வருகிறது. எரிமலை வெடிப்பின் தொடக்க கட்டத்தில் அதன் பாதிப்புகளை முழுமையாக கூறமுடியாது என்றாலும் அதிலிருந்து விஷவாயுகள் வெளியேறும் வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த ஆண்டு இதே எரிமலையில் ஏற்பட்ட வெடிப்புசுமார் 6 மாதங்கள் வரை நீடித்தது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# துணை ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ஜெகதீப் தன்கருக்கு மாயாவதி வாழ்த்து



இந்தியாவின் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடுவின் பதவிக்காலம் வரும் 10ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதால், அடுத்த துணை ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நேற்று நடைபெற்றது. இந்தத் தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் மேற்கு வங்காள முன்னாள் ஆளுநர் ஜெகதீப் தன்கரும் எதிர்க்கட்சிகளின் சார்பில் மார்கரெட் அல்வாவும் போட்டியிட்டிருந்தனர்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சேர்ந்து உள்ள 780 எம்.பி.க்களில், 725 பேர் வாக்களித்திருந்தனர். வாக்கு எண்ணிக்கை முடிந்த நிலையில், ஜெகதீப் தன்கர் அபார வெற்றி பெற்று புதிய துணை ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார். தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக போட்டியிட்ட ஜெகதீப் தன்கர் 528 வாக்குகளும், எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் மார்கரெட் அல்வா 182 வாக்குகளும் பெற்றனர். புதிய துணை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜெகதீப் தன்கருக்கு கட்சித் தலைவர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர். பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதியும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், நாட்டின் துணை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஜெகதீப் தன்கருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். பொதுநலன் மற்றும் இயக்கத்தின் நலனைக் கருத்தில் கொண்டு பகுஜன் சமாஜ் கட்சி அவருக்கு ஆதரவளித்தது. அரசமைப்புச் சட்டப் பொறுப்புகளை கண்டிப்பாக நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கிறேன், என்று தெரிவித்துள்ளார்.

## தோழர் நல்லகண்ணுவுக்கு தகைசால் தமிழர் விருது



இந்தியாமுழுவதும் வரும் ஓகஸ்ட் 15ஆம் திகதிஅன்று75ஆவது சுதந்திரதின விழா கொண்டாடப்பட விருக்கிறது. அந்த வகையில், சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் சுதந்திர தின விழாவில் பல்வேறு விருதுகள் வழங்கப்படுவது வழக்கம்.

அதன்படி, தமிழக அரசின் தகைசால் தமிழர் விருதுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணுவின் பெயர் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த விருது சுதந்திர தின விழாவில் வழங்கப்படவுள்ளதாகதமிழகஅரசுதெரிவித்துள்ளது. சுதந்திரதின விழாவில் நல்லகண்ணுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விருது வழங்கி கௌரவிக்கவுள்ளார். 96 வயதாகும் தோழர் நல்லகண்ணு, சுதந்திரப் போராட்டத்திலும் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக 50 வீத அரசு பேருந்துகள் நிறுத்தம்



கேரள அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் மாநிலம் முழுவதும் மட்டுமின்றி அண்டை மாநிலங்களுக்கும் பேருந்துகள் இயக்கப்பட்டு வரும் நிலையில், கேரள அரசுப் போக்குவரத்துக் கழகம், எண்ணெய் நிறுவனங்களுக்குக் கொடுக்க வேண்டிய கட்டணப் பாக்கி 135 கோடியாக உயர்ந்துள்ளது. இதனால், எண்ணெய் நிறுவனங்கள் டீசல் வழங்குவதை நிறுத்தியுள்ளன. எனவே போக்குவரத்துக் கழகம் தற்போது, தினமும் பணம் செலுத்தி டீசல் கொள்முதல் செய்து வருகிறது.

இந்தியன் ஆயில் கோர்ப்பரேஷன் (ஐ.ஓ.சி.) நிறுவனம், நிலுவையில் உள்ள 123 கோடி மற்றும் வட்டி உட்பட முந்தைய பாக்கியான 139 கோடியை தராது டீசல் வழங்க மறுத்துவிட்டது. இதன் காரணமாக கேரள அரசு போக்குவரத்துக் கழகம் தனது சேவைகளைக் குறைத்துள்ளது. டீசல் தட்டுப்பாடு காரணமாக நீண்ட தூர சேவைகள் மற்றும் 50 சதவீத சாதாரண சேவைகள் குறைக்கப்பட்டுள்ளன. திங்கட்கிழமைக்கான எரிபொருளைச் சேமிப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது.

டீசல் தேவைக்காக 10 மாவட்டங்களில் சாதாரண சேவைகள் ரத்துச் செய்யப்பட்டதால், மாநிலத்தின் பல பகுதிகளில் பயணிகள் பரிதவிப்புக்கு உள்ளாகினர். இதனால், வட்டக்கொட்டாரக்கரை பஸ் நிலையத்திற்குள் பயணிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போக்குவரத்துக் கழகம் சார்பில் வெளியிடப்பட்ட குறிப்பில், மழை மற்றும் விடுமுறை காரணமாகவே சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் இன்று 33ஆவது கொரோனா தடுப்பூசி முகாம்



தமிழகத்தில் கொரோனாப் பரவலைத் தடுக்கும் வகையில் மெகா தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் தமிழகத்தில் 4 ஆம் அலையை தடுக்கும் விதமாக தமிழகத்தில் இன்று சுமார் 50 ஆயிரம் இடங்களில் கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடைபெற்றுள்ளன.

குறிப்பாக சென்னையில் உள்ள அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற சுகாதார மையங்கள் மற்றும் பாடசாலைகள் உள்ளிட்ட இடங்களில் 2000 இடங்களில் முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதேபோல், ஈரோடு, மதுரை, கரூர் உள்பட அனைத்து மாவட்டங்களிலும் கொரேனா தடுப்பூசி முகாம் நடைபெற்றுள்ளது. ஏற்கனவே 2 டோஸ் போட்டவர்களுக்கு இன்றைய 33 ஆவது தடுப்பூசி முகாமில் இலவசமாக பூஸ்டர் டோஸ் தடுப்பூசியும் போடப்பட்டுள்ளது.

## போராட்டம் நடத்திய காங்கிரஸ் தலைவர்கள் மீது 2 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது



விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு போன்றவற்றை கண்டித்து மத்திய அரசுக்கு எதிராக நேற்று முன்தினம் நாடு முழுவதும் காங்கிரஸார் போராட்டம் நடத்தினார்கள். தலைநகர் டெல்லியில் நடந்த போராட்டத்தில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எம்.பி., பிரியங்கா காந்தி மற்றும் காங்கிரஸ் எம்.பி.க்கள், தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு டெல்லி பொலிஸார் அனுமதி வழங்கியிருக்கவில்லை. ஆனாலும் அதை மீறி டெல்லி விஜய் சவுக் பகுதியில் நடந்த போராட்டத்தில் பங்கேற்ற ராகுல் காந்தி மற்றும் 65 எம்.பி.க்கள், தலைவர்கள் உள்ளிட்ட 335 பேரை பொலிஸார் கைதுசெய்தனர். பின்னர் மாலையில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

காவல்துறைஅனுமதியைமீறிப்போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக காங்கிரஸ் தலைவர்கள் மீது டெல்லி துக்ளக் ரோட் பகுதிப் பொலிஸார் 2 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இந்திய தண்டனை சட்டம் 186 மற்றும் 188 பிரிவுகளின் கீழ் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. மேலும் அவர்கள் மீது போராட்டம் நடந்த போது எடுக்கப்பட்ட வீடியோ ஆதாரத்துடன் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவும் பொலிஸார் முடிவு செய்துள்ளனர்.

# தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாவிட்டால் திராய்க்கேணிப் படுகொலைகள் பல நிகழும்

## 32 ஆவது வருட படுகொலை நினைவு தினத்தில் கலையரசன் எம்.பி. எச்சரிக்கை





(காரைதீவு நிருபர் சகா)

தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாவிட்டால் எதிர் காலத்தில் திராய்க்கேணியின் நிலைமை தான் முழு கிழக்கு மாகாணத்திற்கும் நேரும்.

- இவ்வாறு திராய்க்கேணி படுகொலை தினத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் குறிப்பிட்டார்.

1990 ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்ற திராய்க்கேணி படுகொலை சம்பவத்தின் 32 வது வருட நினைவேந்தல் நிகழ்வு, சம்பவம் இடம்பெற்ற திராய்க்கேணி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்று நடைபெற்றது.

அகம் மனிதாபிமான வள நிலையமும், சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் மற்றும் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பிரபல சமூக செயற்பாட்டாளர் த.பிரதீபன், சூழலியல் அமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளர் ரி.கிருஷாந்த், அகம் அமைப்பின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் திருமதி நவரட்ணம்அஞ்சலிதேவி ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டார்கள்.

ஆரம்பத்தில், படுகொலையின் போது வெட்டிக் கொலை செய்யப்பட்ட 54 பேரின் திருவுருவப் படங்களுக்கும் முன்னால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. மலர் அஞ்சலி செலுத்தி அக வணக்கம் செலுத்தப்பட்டது.

படுகொலை சம்பவத்தில் கணவர்மாரை இழந்து விதவைகளான 40 பேரில், நேரிலே கண்முன்னே சம்பவத்தைபார்த்துஇன்றும்வாழ்ந்துகொண்டிருக்கின்ற இரண்டு தாய்மார்களான அன்னம்மா, மாரிமுத்து மற்றும் கிராம தலைவர் சி.கார்த்திகேசு ஆகியோர் அழுது அழுது உரையாற்றினார்கள்.

அங்கு நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

இலங்கை நாட்டிலே சுதந்திரத்திற்கு பின்பு திட்டமிட்டவகையில் 1956 ,1985 ,1990,2009 வரை தமிழ் மக்கள் திட்டமிடப்பட்டு படுகொலை செய்யப்பட்டு வந்திருக்கின்றார்கள். ஆனால் இதுவரை அப்படுகொலைகளுக்கு நீதியோ, நஷ்ட ஈடோ கிடைக்கவில்லை.

எந்த இனமாக இருந்தாலும் ஆலயம் என்பது புனித ஸ்தலமாக இருக்கும். ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கையில் இந்து ஆலயத்தில்தான் அதிகமான படுகொலைகள் இடம் பெற்று இருக்கின்றன. அரசாங்கமே இராணுவத்தையும், முஸ்லிம் ஊர்காவல் படையினரையும் பயன்படுத்தி இந்தத் திட்டமிட்ட படுகொலைகளைச் செய்தது .

அம்பாறை மாவட்டத்தில் திராய்க்கேணி மட்டும் அல்ல உடும்பன் குளத்திலே 151 விவசாயிகள் சுற்றி வளைக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதேபோன்று சொறிக்கல்முனையில் பங்குத்தந்தை செல்வராஜா பாதர் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட கிறிஸ்தவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். வீரமுனையிலும் ஆலயத்தில் வைத்து நூற்றுக்கணக்கான அப்பாவி தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இந்த வரலாற்றை எல்லாம் நாங்கள் அடுத்த சந்ததிக்கு எடுத்துசெல்ல வேண்டும். சமகால சந்ததியினர் சுதந்திரமாக நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக இத்தகைய நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

அம்பாறை மாவட்டத்திலேயே 58 தமிழ்கிராமங்களை இலக்கு வைத்து இன அழிப்பு நடத்தப்பட்டது. ஆலங்குளம், மீனோடைக்கட்டு போன்ற கிராமங்கள் ஒரு தமிழர்களும் இல்லாமல் முற்றாக கபளீகரம் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையின் இனவாதிகளும் இணைந்து செய்தார்கள் என்பதற்கு மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

எமது அடையாளத்தை நாங்கள் பேணவேண்டுமாக இருந்தால் - அரசியல் ரீதியான தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால் - நாங்கள் தொடர்ச்சியாக அமைதி வழி அறவழிப்போராட்டத்தில் ஈடுபட வேண்டும். அதைத்தான் எமது கட்சியும் செய்து கொண்டிருக்கிறது.

- என்றார். ஆலய தலைவர் ரி.யோகநாதன் நன்றி உரையாற்றினார்.

# தம்பலாகமத்தில் 35 குடும்பங்களுக்கு பால் மாடுகள் விநியோகிக்கும் திட்டம்



(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலாகமம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 10 கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் - உள்ள வறுமை கோட்டின் கீழ் வாழும் மற்றும் பால் மாடு வளர்ப்பில் அனுபவமுள்ள - 35 குடும்பங்களுக்கு சுமார் 2 லடசம் ரூபா முதல் 3 லட்சம் ரூபா வரையான பெறுமதி உள்ள பால் மாடுகள் வழங்கும் நிகழ்வு திட்டத்தின் முதலாம் கட்ட கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வியாழனன்று இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற இக் குறித்த கூட்டத்தில் பசு மாடு வளர்ப்பது தொடர்பிலும் அதனை பராமரித்து பால் மூலமாக நாளாந்த வருமானமீட்டல் தொடர்பிலும் பயனாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. இந்தத் திட்டம் முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், முஸ்லிம் எயிட் நிறுவன ஊழியர்கள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# திருமலையில் பண்பாட்டு மைய திறப்பு விழாவில் நடிகர் நாஸர்



திருகோணமலை மாவட்டம், மூதூர், சேனையூர் அனாமிகா களரி பண்பாட்டு மையம் நூலகம், கலை கூடம் - களரி, ஆவணக் காப்பகம், கணனி கூடம் என்பன எதிர்கால சந்ததியினருக்கு பயன்பெறும் வகையில் கலாநிதி பாலசிங்கம் சுகுமார் தலைமையில் நேற்றுக் காலை 10.00 மணி அளவில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் தென்னிந்திய நடிகர் நாஸர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். கலை,கலாசார அலுவல்கள் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என்று பலரும் கூட கலந்து சிறப்பித்தனர். கூத்துக்கள், நாட்டார் இலக்கியங்கள் மற்றும் பண்பாட்டு பாரம்பரிய நிகழ்வுகள் என்று பல நிகழ்ச்சிகள் நேற்றும் இன்றும் அங்கு அரங்கற்றப்படவுள்ளமை விசேட அம்சமாகும். இத்திருவிழாவில் Page Book House நிறுவனம் சார்பில் புத்தக விற்பனை கூடமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெறும் பதவிகளை விடுத்து நாடாளுமன்றக் குழு அமைப்பின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்!

## சஜித் திட்டவட்ட முடிவு





நாட்டைக் கட்டியெழுப்புவதே அனைவரினதும் பொதுவான இலக்காகும் எனவும், அதற்காக தமது தனிப்பட்ட இலாப எதிர்பார்ப்புகளை ஒதுக்கி வைத்து-விட்டு ஒன்றிணைய வேண்டும் எனவும், இது வெறும் பதவிப் பரிமாற்றமாக இருக்காது,குழு அமைப்பு மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவதில் முனைப்பாக பங்களிப்பை வழங்கக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இது சர்வ கட்சிகளின் கூட்டு வேலைத்திட்டம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதற்கு அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

19 ஆவது திருத்தத்தை நல்லாட்சி அரசாங்கம் கொண்டு வந்ததாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அதனை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் எனவும், தற்சமயம் துறைசார் மேற்பார்வைக் குழு அமைப்புக்கு அப்பாற்பட்ட, புதிய சக்தி வாய்ந்த குழு முறையின் ஊடாக நாடாளுமன்றத்தை முனைப்புடனான பொது கூட்டு வேலைத்திட்டத்தின் ஊடாக வழிநடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதற்கு அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைப்பது மிகவும் அவசியமானது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்த பாரதூரமான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தற்போது அமுலில் உள்ள அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், நாட்டில் சாதாரண சட்டத்தை அமுல் படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தற்போது நடைபெற்று வரும் அடக்குமுறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனத்; தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், சட்டத்தை மீறி வன்முறையை பரப்பிய நபர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தொழிற்சங்கங்கள் சிவில் பொது சமூகத் தலைவர் களை ஒடுக்கி வருவதாகவும், இது உடனடியாக நிறுத்தப் பட வேண்டும் எனவும், இது தொடர்பில் ஜனாதிபதி கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். இந்தத் தருணத்தில், எமது நாடு வீழ்ந்துள்ள வீழ்ச்சியிலிருந்து மீட்பதற்கு மிகவும் சாதக மான தலையீட்டை மேற்கொள்வதாகத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் தன்னால் முடிந்த பங்களிப்பை வழங்குவதாகவும் தெரிவித்தார். குறிப்பாக எதிர்க்கட்சியின் மூச்சு மற்றும் பிரபஞ்சம் வேலைத்திட்டங்களை நினைவு கூர்ந்த அவர், நாடளாவிய ரீதியில் அவற்றை இன்னும் முனைப்புடன் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்க்கு 700 கோடி டொலர் நட்டமாம்!

எரிபொருளுக்கான செலவுக்கு மேலதி கமாக மாதாந்தம் 700 கோடி டொலர் நட்டத்தை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் சந்திக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் விமானத்துக்கான எரிபொருளை வழங்காததாலும், அந்த எரிபொருளை இந்தியாவிடமிருந்து பெற வேண்டியமை யால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா செல்லும் விமானக் குழுவினருக்கு தங்குமிடம் மற்றும் இதர வசதிகள்செய்தல், விமானம்தரையிறக்கல் மற்றும் புறப்பாட்டுக்காகவும் செலவு ஏற்படுகின்றது. ஒரு மாதத்துக்கு 25 முதல் 30 விமானங்கள் இந்தியாவிற்கு செல் வதாகவும் ஒரு நாளைக்கு ஐந்தரை லட்சம் லீற்றர் எரிபொருள் தேவை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெற்றோலியம் வர்த்தகம் செய்யும் புதிய நிறுவனாங்களை மதிப்பிட குழு



எரிபொருள்களை இறக்குமதி செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் பொருத்தமான நிறுவனங்களை மதிப்பிடுவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழு கடந்த வெள்ளிக்கிழமை நியமிக் கப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு மேலதிகமாக பல நிறுவங்கள் ஈடுபட முடியும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்காக எட்டு பேர் கொண்ட குழுவொன்று வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்டது.

குழுவின் பரிந்துரைகளை ஒரு மாதத்திற்குள் முன்வைக்குமாறும் அமைச்சர் விஜேசேகர பணிப்புரை விடுத்துள்ளார்.

# கூரை உடைத்து வீட்டுக்குள் சிறுத்தை மயக்க ஊசி செலுத்தி உயிருடன் மீட்பு!





தலவாக்கலை, லோகி தோட்டம் கூம்வூட் பிரிவிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த சிறுத்தை கடும் போராட்டத்துக்கு மத்தியில் உயிருடன் பிடிக்கப்பட்டு, நுவரெலியா மிருக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்ட லோகி தோட்டம் கூம்வூட் பிரிவிலுள்ள வீடொன்றுக்குள் 04 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் இலங்கைக்கு உரித்தான சிறுத்தை ஒன்று வீடொன்றுக்குள் புகுந் துள்ளது.

நாய் ஒன்றை துரத்தி வந்த குறித்த சிறுத்தை வீட்டின் கூரை மீது ஏறியபோது, கூரை உடைந்ததால், வீட்டுக் குள் விழுந்துள்ளது.

இதன்போது வீட்டிலுள்ளவர்கள் பயந்து என்னவென்று பார்த்தபோது சுமார் 6 அடி நீளமான சிறுத்தை வீட்டுக்குள் விழுந்ததை பார்த்துள்ளனர்.

இதன்போது வீட்டுக்குள் இருந்த சிறுத்தையை பார்வையிட சென்ற தோட்டத்தைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவர் சிறுத்தையின் தாக்குலுக்கு இலக்காகி நுவரெலியா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டமையுடன், வீட்டிலிருந்த ஏனையோர் வீட்டை பூட்டிவிட்டு, வெளியே வந்து லிந்துலை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் ரந்தனிகல மற்றும் நுவரெலியா வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்தனர்.அவர்கள் சம்பவ இடத்துக்கு வருகைத் தந்து, குறித்த சிறுத்தையை கடும் சிரமத்துக்கு மத்தியில் மயக்கஊசியைசெலுத்திமீட்டுகொண்டுசென்றுள்ளனர்.

சுமார் 6 அடி நீளமான 5 முதல் 8 வயது மதிக்கத்தக்க இலங்கைக்கு உரித்தான சிறுத்தையொன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.08.2022இல் வெளியிடப்பெற்றது.